# பத்துக் கட்டளைகள்

I. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.
II. … ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் … .
III. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக … .
IV. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.
V. … உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.
VI. கொலை செய்யாதிருப்பாயாக.
VII. விபசாரம் செய்யாதிருப்பாயாக.
VIII. களவு செய்யாதிருப்பாயாக.
IX. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.
X. இச்சியாதிருப்பாயாக.

*யாத். 20:1-17*

*இஸ்ரவேல் நாட்டவருக்குத் தேவன் கொடுத்த நியாயப் பிரமாணமானது (உபா. 4:7, 8) "உடன்படிக்கை"யின் இருதயம் எனப்பட்ட பத்துக் கட்டளைகள் உட்பட ''கட்டளைகள்,'' ''ஆணைகள்,'' "சாட்சியங்கள்," "கோட்பாடுகள்," "சட்டங்கள்" மற்றும் "நியாயங்கள்" ஆகியவைகளால் ஆனதாயிருந்தது. பத்து கட்டளைகள் உட்படத் தேவனுடைய கட்டளைகள் எதையும் குறிப்பிடும்பொழுது "நியாயப்பிரமாணம்" என்ற வார்த்தையானது பயன்படுத்தப்பட்டது. இதற்கான நல்லதொரு சுட்டிக்காட்டுதலானது சங். 119ல் காணப்படுகின்றது. இந்த சங்கீதத்தில் தாவீது, ஒரு உடன்படிக்கையையோ அல்லது பத்துக் கட்டளைகளையோ குறிப்பிடவில்லை என்றாலும், அவர், "வேதம்" (வ. 1), "சாட்சிகள்" (வ. 2), "கட்டளைகள்" (வ. 4), "பிரமாணங்கள்" (வ. 5), "கற்பனைகள்" (வ. 6), ''நீதிநியாயங்கள்'' (வ. 7) மற்றும் ''வசனங்கள்'' (வ. 16) போன்ற சொற்றொடர்களில் அவைகளை உள்ளடக்கினார்.*

*தேவன் இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்திருந்த நியாயப் பிரமாணத்தில் பத்துக் கட்டளைகள் உள்ளடங்கியிருந்தன. அவைகள் எவ்விதம் தரப்பட்டன என்ற விபரத்திற்கு முன் (உபா. 5:6-21) பின்வரும் கூற்றானது*

தோன்றுகின்றது: "இதுவே மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு விதித்த பிரமாணம். இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்ட பின்பு, ... . அவர்களுக்கு மோசே சொன்ன சாட்சிகளும் கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே" (உபா. 4:44, 45).

நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுதலுக்கு ஒரு முகவுரையாக உபா. 5:1ஆ, 2ல் உரைக்கப்பட்ட மோசேயின் கூற்றானது, பத்து கட்டளைகள் "கட்டளைகள்" மற்றும் "நியாயங்கள்" என்று கருதப்படக் கூடும் என்று சுட்டிக்காட்டியுள்ளது: "இஸ்ரவேலரே, நான் இன்று உங்கள் காதுகள் கேட்கச் சொல்லும் கட்டளைகளையும் நியாயங்களையும் கேளுங்கள்; நீங்கள் அவைகளின்படியே செய்யும்படிக்கு அவைகளைக் கைக்கொள்ளக் கடவீர்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஓரேபிலே நம்மோடே உடன்படிக்கை பண்ணினார்."

இஸ்ரவேலர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அவர்களுடைய நாட்டின் தேவைகளைச் சென்று அடையும்படியாக உடன்படிக்கையானது தன்னிலேயே கட்டளைகள் உள்ளதாக ஏற்படுத்தப்பட்டது. நியாயப்பிரமாணத்தின் இயல்பானது இரண்டாம் கட்டளையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது, அதில் தேவன், "என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன்" (உபா. 5:10) என்று வாக்குத்தத்தம் செய்தார்.

தேவன் தம்மை இஸ்ரவேல் மக்களுடன் பிணைத்துக் கொண்ட அடிப்படைப் பத்திரத்தைப் பத்துக் கட்டளைகள் உள்ளடக்கியிருந்தன. பத்துக் கட்டளைகளில் எட்டுக் கட்டளைகள் "நீ செய்யாதிருப்பாயாக" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தும் எதிர்மறை வடிவம் கொண்டு இருந்தன. நான்காவது மற்றும் ஐந்தாவது கட்டளைகள் மட்டுமே நேர்மறைக் கூற்றாக இருந்தன: "ஓய்வுநாளை ஆசரிப்பாயாக" மற்றும் "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக." பத்துக் கட்டளைகள் யாவும் அவைகளின் அளவீடுகள் முழுமையாய் விளக்காமல் அல்லது அவைகளைச் செயல்படுத்துவது எவ்விதம் என்று விரிவாக்கம் தராமல் சுருக்கமாக மற்றும் எளிமையாக எடுத்துரைக்கப்பட்டன.

இவ்விதமாக, உடன்படிக்கையைச் செயல்படுத்துவது பற்றிக் கேள்விகள் எழும்புவது என்பது நிச்சயமானதாய் இருந்தது: "இந்தக் கட்டளைகள் ஒவ்வொன்றிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்ன?"; "இந்தக் கட்டளைகளை மீறக்கூடிய செயல்பாடுகள் என்ன?"; "ஒரு கட்டளை மீறப்பட்டுள்ளதா அல்லவா என்பதை நாம் எவ்விதம் தீர்மானம் செய்வது?"; "ஒரு கட்டளையை மீறுகின்ற ஒரு நபர் எவ்விதம் தண்டிக்கப்பட வேண்டும்?" இப்படிப்பட்ட கேள்விகள் பதில் அளிக்கப்பட வேண்டும். சட்டங்கள், கட்டளைகள், கொள்கைகள், ஆணைகள், சாட்சிகள் மற்றும் நீதிநியாயங்கள் இந்த நோக்கத்திற்காகவே நிலவின (உபா. 4:14ஐக் காணவும்). இந்தச் சட்டங்கள் நீதிநியாயங்கள் இன்றி, உடன்படிக்கை யானது அவைகளை எவ்விதம் அமுல் படுத்துவது என்ற போதுமான தகவலற்ற சட்டங்களின் பலவீனமான ஒரு தொகுப்பாகவே இருந்திருக்கும்.

விரிவாக்கப்பட்ட இக்கூற்றுக்களில் எதையாவது மீறுதல் என்பது உடன்படிக்கையை மீறுவதைப் போன்றதாகவே இருக்கும், ஏனெனில் பத்துக் கட்டளைகளின் அளவீடுகளை அறிந்து கொள்வதற்கு இஸ்ரவேலர்களுக்கு உதவுவதற்காகவே இந்தத் துணை அறிவுறுத்தல்கள் தரப்பட்டன.

கட்டளைகளில் பெரும்பாலானவற்றை மீறினால் மரண தண்டனையே தரப்பட்டது. களவு செய்தல், பொய்யுரைத்தல், இச்சித்தல் ஆகியவை விதிவிலக்குகளாய் இருந்தன. களவாடுதல்கூட ஒரு நபரைக் களவாடுதலாய் (கடத்திச் செல்வதாய்) இருந்தால் அதற்கும் மரண தண்டனை விதிக்க முடிந்திருந்தது (யாத். 21:16; உபா. 24:7). அது போலவே இச்சித்தல் என்பது மற்ற கட்டளைகளை மீறுதலுக்கு வழி நடத்திற்றென்றால் அதற்கும் இதே விதமான தண்டனை தரப்பட்டது.